# Nomadic Life of Narikkuravas

**Dr. V. Nirmalar selvi**
*Assistant Professor, Dept. of Tamil Language*
*Head (i/c) Chair on Christian Tamil Literature*
*Marina Campus, University Of Madras, Chennai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358768

**Abstract**
*Human beings were unable to meet their needs individually hence they formed groups. In these groups everyone was considered equal with no gender - based hierarchy. Food and resources were shared equally. Among them, the strongest and most knowledgeable person was chosen as the leader. The leader's primary duty was to protect the group from harm and maintain its structure. Even though today the clan - based social structure has disappeared and we live in nuclear families there is still one community that has not abandoned its ancient clan lifestyle is the Tribal society. When we think of tribes, we imagine hill - dwelling communities like the Todas, Irulas, and Kurumbas. However this article documents a minority community that travels among us in cities the Narikkuravas. Marginalized at all levels and often treated as mere spectacles, the Narikkurava community deserves attention to shed light on their cultural practices. Discussions about their way of life are essential for improving their access to education, self-reliance, and permanent settlement.*
***Keyword:*** *Narikkuravar, Kuruvikkarar, Vagri, Vagri Poli, Tribe, Mughals, Rattiyan, Hakki Pikki, Migration, Nomadic Life, Resource Sharing, Sambukkudisai, Ritual Dance, Care (Temporary shed), Padheedu (Sharing), Hunting, Elderly people, Dowry system, Thali, Worship, Gender equality, Cultural values.*

**References**

1. Karasur Padmabharathi, Narikkuravar Inavaraiviyal, Tamizhini Pathipagam, Selavoyal, Chennai.
2. Bilo Irudhayanath, Yar Indha Nadodigal, Vanathi Pathipagam, Thiyagaraya Nagar, Chennai
3. Prof. Bakthavatchala Bharathi, Prof. Kalanidhi, Elangai Indhiya Maanudaviyal, NCBH, Ambathur, Chennai
4. Prof. Bakthavatchala Bharathi Panpattu Manidaviyal (2011), Adayalam Pathipagam Trichy.
5. Dhananjayan, Vilimbu Nilai Makkal Vazhakkarugal, NCBH Ambathur, Chennai. 600 098.
6. Dr. Aaru Ramanathan, (EDIT), Vazhum Marabugal, (2001), Thanannaney Pathipagam, Bangalore.
7. Prof. Bakthavatchala Bharathi, Tamizhagap Pazhangudigal (2013), Adyalam Pathipagam, Trichy – 621 310.
8. Dr. K. Seenivasavarma, Narikkuravap Pazhangudi Makkal (1978), Annamalai University, Chidhambaram
9. Na. Cl. Kandayaapillai, Thenindhiya Kulangalum Kudigalum (2015), Sandhiya Pathipagam, Chennai – 600 083.
10. Avvai. Su. Duraisamipillai, Aingurunooru (Edit), kazhaga Veliyeedu, Chidhambaram

# நரிக்குறவரின் நாடோடி வாழ்வியல்

***முனைவர் வே. நிர்மலர் செல்வி***
தலைவர்(பொ) கிறித்தவத்தமிழ் இலக்கிய இருக்கை
உதவிப் பேராசிரியர், தமிழ்மொழித்துறை
மெரினா வளாகம் , சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*தனிமனித நிலையில் தன் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத மனித இனம் குழுவாகச் செயல்பட்டது. இக்குழுக்களில் அனைவரும் சமமாகவே கருதப்பட்டனர். ஆண் – பெண் என்ற ஏற்றத்தாழ்வுகள் இல்லை. உணவும் பாதீடு முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதனால் தங்களின் சமூகத்தில் வலிமை, அறிவு முதிர்ச்சி எனும் வகையில் உயர்நிலையில் உள்ள ஒருவரை இனக்குழுவின் தலைவனாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டனர். தான் சார்ந்த குழுவிற்குத் தீங்கு வராமலும் தன் சமூகத்தின் கட்டமைப்பு சீர் கெடாமலும் காப்பதே இனக்குழுத் தலைவனின் முதன்மையான பணியாக இருந்தது. அந்த வகையில் இன்று “இனக்குழு” என்ற சமூக அமைப்பு மறைந்து “தனிக்குடும்பம்” என்ற நிலைக்கு நாம் வந்துவிட்டபிறகும் கூட ஆதி சமூகக் கட்டமைப்பான இனக்குழு வாழ்க்கையை இன்றும் கைவிடாத ஒரு சமூகம் உண்டென்றால் அது நம் பழங் குடிச்சமூகமே. பழங்குடி என்றதும் நம் கண்முன் விரிவது மலையில் வாழும் தோடர், இருளர், குறும்பர் போன்ற மலையின மக்களே! ஆனால், இக்கட்டுரை ஆவணப்படுத்துவது நம்மோடு நகரங்களில் பயணிக்கும் சிறுபான்மைச் சமூகமான நரிக்குறவர் குறித்தே! சமூகத்தில் அனைத்து நிலையிலும் பின்தங்கியும் குறிப்பாக, நம்மால் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டும் ஒரு காட்சிப் பொருளாக உலாவரும் நரிக்குறவர் சமூகம் புதிய வெளிச்சம் பெறத் தொடர்ந்து அவர்களின் வாழ்வியற் பண்பாடுகள் பேசப்பட வேண்டும். கல்வி – சுகாதாரம் – நிலையான இருப்பிடம் என அவர்களின் வாழ்வு மேம்படவும் இப்பதிவு அவசியமாகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *நரிக்குறவர் – குருவிக்காரர் – வாக்ரி – வாக்ரி போலி – இனக்குழு – முகலாயர்கள் – இராட்டியன் – ஹக்கி பிக்கி – இடம்பெயர்தல் – நாடோடி வாழ்வு – பாதீடு – சம்புக்குடிசை – பண்பாடு – கேர் – வேட்டையாடுதல் – முதியோர் – வரதட்சணை – தாலி – வழிபாடு – ஆண் – பெண் சமத்துவம் – பண்பாட்டு விழுமியங்கள்.*

**நரிக்குறவர் - பெயர்க் காரணம்**

நரியினை வேட்டையாடி அதன் இறைச்சியினை உண்பதாலும் நரித்தோல், நரிப்பல், நகம், வால், கொம்பு முதலியவற்றை விற்பதாலும் “நரிக்குறவர்” என்று தொழில் அடிப்படையில் அழைக்கப் பெறுகின்றனர். நரிக்குறவர் வலைவிரித்தும் வெடி வைத்தும் காடை, கௌதாரி போன்ற குருவிகளைப் பிடிப்பதால் குருவிக்காரன் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் நாம் புரிந்துக்கொள்ள முடியாத “வாக்ரி” என்ற கலப்பு மொழியில் (தமிழ் - தெலுங்கு - மராட்டி) பேசுகிறார்கள். இது இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. வாக்ரி என்ற குஜராத்தி சொல்லுக்குப் பறவை அல்லது குருவி என்று பொருள்படும். எனவே “வாக்ரி” எனக் குருவிக்காரனைக் குறிப்பது வெகு பொருத்தமே.

நரிக்குறவர் சமூகம் குறித்து எழுத்துவழிச் செய்திகளோ வரலாறோ ஏதுமில்லை. இவர்கள் இன்றும் உணவு சேகரிப்பவர்களாகவே (Food Gathering Tribes) இருக்கின்றனர். ஒரு நிலையான இருப்பிடம் ஏது மின்றி இடம்பெயர்தல் ஒன்றையே தங்களின் இலக்காகக் கொண்டு தொடர்ந்து பயணிக்கும் ஒரு இனக்குழுக் கூட்டம் உண்டென்றால் அது நரிக்குறவர் கூட்டம் மட்டுமே.

### நரிக்குறவர் - யார்?

நரிக்குறவர்கள் மராட்டிய மன்னன் சத்ரபதி சிவாஜியின் படைவீரர்களாக இருந்தவர்கள். சிவாஜிக்கும் முகலாயர்களுக்குமிடையே ஏற்பட்ட போரில் சிவாஜியின் படை தோற்றுவிட நரிக்குறவர்களை அடிமைகளாகவும் தங்களுக்குப் பணிவிடைச் செய்யும் பணியாளர்களாகவும் முகலாயர்கள் வைத்துக்கொண்டனர். ஏறக்குறைய நூறு ஆண்டுகள் முகலாயர்களுக்கு அடிமைகளாக வாழ்ந்த நரிக்குறவர்கள் அவர்களுக்குப் பயந்து நாட்டு வாழ்க்கையைக் கைவிட்டு வனங்களில் ஓடியொளிந்தனர். அப்போது நரிக்குறவர்கள் அணிந்திருந்த ஆடைகள், அவர்கள் முகலாயர்களுக்கு அடிமைகளாக இருந்தனர் என்பதை அடையாளம் காட்டவே அவற்றைக் கைவிட்டு வனங்களில் கிடைக்கும் இலைகளைக் கொண்டு ஆடைகள் செய்து அணிந்துக் கொண்டனர். வடக்கே முகலாயர்களுக்குப் பயந்து சிறிது சிறிதாகப் புலம் பெயர்ந்து தெற்கே வந்து குடியமர்ந்தனர் என்றே நரிக்குறவரின் வரலாறு பேசப்படுகின்றது. (கரசூர் பத்மபாரதி, நரிக்குறவர் இனவரைவியல்)

### நரிக்குறவரின் வாழ்விடங்கள்

நரிக்குறவர்கள் தமிழகம் முழுவதும் பரவியிருக்கின்றனர். குறிப்பாக மதுரை, திருச்சி, கன்னியாகுமரி, தஞ்சை, நாகபட்டினம், திருநெல்வேலி, சங்கராபுரம், கள்ளக்குறிச்சியிலும், சென்னையில் கோட்டூர்புரம், அம்பத்தூர் போன்ற பகுதிகளையும் மற்றும் மக்கள் நடமாட்டம் இல்லாத ஒதுக்குப்புறமான நிலப்பகுதிகளையும் அவர்களின் வாழ்விடங்களாக அமைத்துக்கொள்கிறார்கள்.

### நாடோடி வாழ்வும் - இடம் பெயர்தலும்

நிலையான இருப்பிடம் இன்றி இடம்பெயர்தலை தம் வாழ்நாள் முழுமையும் கடைபிடிக்கும் ஒரு இனமாகவே நரிக்குறவர்கள் இருக்கின்றனர்.

இதற்குப் பல்வேறு காரணங்களும் உண்டு.

- நரிக்குறவரின் முதன்மைத் தொழில் வேட்டையாடுதல் என்பதால் வேட்டையாட ஏதுவாக உள்ள இடங்களைத் தேர்வுச் செய்த வண்ணம் இடம் விட்டு இடம் பெயர்ந்துக் கொண்டே இருக்கும் நாடோடி வாழ்க்கையினையே அவர்கள் விரும்புகின்றனர்.
- வேட்டையுடன் காடுகளில் கிடைக்கும் உணவுப் பொருட்களை சேகரிக்கும் பொருட்டும் இடம்பெயர்தலில் ஈடுபடுகின்றனர். நரிக்குறவர்களில் ஆண்கள் சிறு விலங்குகளை வேட்டையாடியும், தேனெடுத்தும், பெண்கள் வனத்தில் கிடைக்கும் மூலிகை மற்றும் சிறுபொருட்களைச் சேகரிப்பதிலும் இடம்பெயர்தலை மேற்கொள்கின்றனர். சேகரித்தப் பொருட்களை நகர்ப்புறங்களில் விற்கும் பொருட்டும் இடம் பெயர்தலைச் செய்கின்றனர்.
- நரிக்குறவர் கூட்டத்தில் இறப்பு நேரும் பொழுதும் இடம்பெயர்தல் நிகழ்கின்றது. நாடோடிகளாக வாழும் நரிக்குறவர்கள் தங்கள் கூட்டத்தில் ஒரு நபர் இறந்து விட்டால் மேற்படி காரணத்திற்காக அந்த கிராமத்தையே காலி செய்துவிட்டு அடுத்த கிராமத்திற்கு குடி போகிறார்கள். இச்சடங்கு எப்பொழுது உண்டானது என்பதை பற்றி ஆராய்ச்சி செய்யும்போது இது ஆதிமனிதனின் குகை வாழ்க்கையில் இருந்தே தொடக்கம் பெற்றிருக்க வேண்டும் என்பதும், இனக்குழு வாழ்வின் எச்சமாக இம்முறை இன்றுவரை இப்பழங் குடிகளிடம் இருப்பதையும் இதன்வழி அவதானிக்க முடிகின்றது. (பிலோ இருதயநாத், யார் இந்த நாடோடிகள்)
- நரிக்குறவரின் வேட்டைச் சமூகப் பின்னணிக்கும் நாடோடி வாழ்க்கைக்கும் அடிப்படையாக அமையும் மற்றொரு அம்சம் அவர்கள் வாழும் நிலையற்ற சம்புக் குடிசை. நரிக்குறவர்கள் வாழும் சம்புக்குடிசையை "கேர்" என்று வாக்ரிபோலியில் அழைக்கிறார்கள். நரிக்குறவரின் நாடோடி வாழ்க்கைக்கும்

உணவு தேடும் பொருட்டும் அடிக்கடி அவர்கள் இடம் பெயர வேண்டி இருப்பதால் ஒவ்வொரு குடும்பத்தினரும் தனித்தனிக் குடிசைகளைத் தைத்துக் கொள்கின்றனர். நீர் நிலைகளில் வளரும் "சம்பு' என்ற ஒருவகைப் "புல்' கொண்டே நரிக்குறவரின் குடிசை அமைகிறது. அதிக இழப்பு இன்றி அவற்றை விட்டுச் செல்லவும் முடிகிறது. ஓரளவுக்கு நிலையான வாழ்வினைக் கண்ட வேட்டைச் சமூகங்களின் இருப்பிடம் எளிமையானதோர் கூடாரமாகவே இருக்கின்றது. (பக்தவச்சல பாரதி, இலங்கை இந்திய மானுடவியல்) மேற்கண்ட கருத்தினை நோக்கும்போது வீடமைப்பானது செய்யும் தொழிலின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது என்பது தெளிவாகின்றது. இலக்கியங்களிலும் குன்றக் குறவர்களின் குடிசையின் அமைப்பு முறைகள் பேசப்படுகின்றன.

**"குன்றக் குறவன் புல்வேய் குரம்பை'**

***(ஊகம்புல்) - (ஐங். -252)***

இலக்கியத்தில் குன்றத்தின் கண் வாழும் குறவனின் புல்லால் வேயப்பெற்ற சிறுகுடிலின் அமைப்பு முறை ஐங்குறுநூற்றில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

## நரிக்குறவரின் வாழ்வியல் பண்பாடுகள்

"பண்பாடு" என்பது மக்கள் அனைவரும் கூட்டமாகச் சேர்ந்து செயல்படும் போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்தச் சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. வாழ்வின் பொருண்மையை பொருள்கோடல் செய்கின்றது, வாழ்வின் செயல்பாடுகளை வடிவமைக்கின்றது. மொத்தத்தில் பண்பாடானது ஒரு சமுதாயத்தின் வாழ்வு முறையின் தொகுப்பாகும். (பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல்)

நரிக்குறவர்கள் பெரும்பாலும் ஊரின் ஒதுக்குப்புறங்களில் கூடாரம் அமைத்துக் கூட்டமாக வாழ்வதை நாம் பார்க்கின்றோம். நகரங்களில் பேருந்து நிலையங்களின் ஓரமாகவும் இரயில் நிலையங்களின் ஒதுக்குப் புறங்களிலும் தங்கியிருப்பதையும் பார்க்கிறோம். நம்மைப்போன்ற மனிதர்கள் அசுத்தம் என விலகி இருக்கும் குப்பைமேடுகளையே இவர்கள் வாழ்வுக்குரிய இடங்களாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஏன் இவர்கள் இப்படிச் செய்கிறார்கள் என நம்மில் யாரும் பெரிதாக யோசிப்பதும் இல்லை, கவலைப்படுவதும் இல்லை. ஆனால், அதன் பின்னணியில் பல்வேறு உளவியல் சார்ந்த காரணங்கள் இருக்கவே செய்கின்றன. மிக முக்கியக் காரணம் அவர்களின் தனிப்பட்ட பண்பாடு - பழக்கவழக்கங்கள் - மரபுசார்ந்த வழிபாடுகள் - நம்பிக்கைகள் எனச் சொல்லலாம். இவர்களின் பழக்கவழக்கங்கள் சாதாரண மக்களுக்கு விசித்திரமாகவும் அருவருக்கதக் கதாகவும் சில நேரங்களில் அச்சமூட்டுவதாகவும் (எருமைப் பலியிடல் போன்றவை) இருப்பது நம் சமூகத்தால் இவர்கள் அங்கீகரிக்கப்படாமல் இருப்பதற்கு முக்கியக் காரணமாக அமைகிறது.

அந்த வகையில் நரிக்குறவரின் பண்பாடுகள் மரபு வழிப்பட்டவையாகவும் புதிய சமூக நடைமுறை மாற்றங்களை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் கட்டமைக்கப்பட்டதாகவும் இருக்கின்றது. நரிக்குறவர்கள் நாடு முழுவதும் பரவி இருப்பினும் இவர்களது மொழியை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து எழுத்து வடிவம் கொடுக்க முடியாமல் குழப்பமடைகின்றனர். காரணம் "வாக்ரி போலி" மொழியானது எந்த மாநிலத்திலும் குறிப்பிடும்படி இல்லை. ஏனெனில் இவர்கள் ஒரே மாநிலத்தில் நிலைத்து வாழாமல் இடம் விட்டு இடம்பெயர்ந்து எந்த மாநிலத்தில்வாழ்கின்றார்களோ அம்மாநிலத்தின் மொழியினையும் கற்றுக்கொண்டு இருமொழிப் பேசும் மக்களாகவே வலம் வருகின்றனர். இன்றும் நரிக்குறவர்களில் பெரும்பான்மையோருக்குத் தாங்கள் பேசும் மொழியின் பெயர் தெரியாது. பல பாஷையும் கலந்து வரும் என்றே கூறுகின்றனர். இத்தகைய இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தில் அமைந்துள்ள குழப்பமான "வாக்ரி போலி" மொழிக்குச் சொற்கோவை (Basic Vocabulary) ஒன்றையும் இலக்கணம்

ஒன்றையும் எழுதிய பெருமை அண்ணாமலைப் பல்கலைக்கழக மேனாள் மொழியியல் பேராசிரியர் கோ. சீனிவாச வர்மா அவர்களையே சாரும்.

பெரும்பாலும் நரிக்குறவர்கள் தங்கள் தாய் மொழியுடன் வட்டார மொழியான தமிழையும் இளம் வயதில் இருந்தே பேசக் கற்றுக் கொள்கின்றனர். தம் இனத்தவருடன் தாய் மொழியிலும் மற்றவர்களுடன் தமிழிலும் கலந்துரையாடுகின்றனர். அவர்களது மொழியில் தமிழ்மொழியின் செல்வாக்கினையும் காண முடிகிறது. தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட பல நாடோடிகள் நிலைகுடிகளை நாடிச் சென்று பொருள் தேடும் போது தமிழிலேயே தங்கள் பாடல்களைப் பாடுகின்றனர். "வாக்ரி போலி" என்னும் இந்தோ - ஆரிய மொழியைப் பேசும் நரிக்குறவர்கள் காளியைப் பற்றித் தமிழில்தான் பாடுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஆ. தனஞ்செயன், விளிம்பு நிலை மக்கள் வழக்காறுகள்)

## வேட்டைத் தொழிலும் - பாதீடும்

"வேட்டைத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நரிக்குறவர்கள் வேட்டைக்குச் செல்கையில் குழுவாகவும் சில சமயம் தனித்தும் செல்கின்றனர். தொடக்கத்தில் வேட்டைக்குச் சென்றவர்கள் உயிரினங்களைப் பிடித்தவர்களுக்கு மூன்றில் ஒருபங்கு என்ற அடிப்படையில் பிரித்துக் கொண்டார்கள். தற்போது வேட்டையில் கிடைப்பதைப் பங்கீட்டு முறையில் சமமாகப் பிரித்து எடுத்துக்கொள்வதில் ஒற்றுமையுடன் இருக்கின்றனர். (டாக்டர் ஆறு. இராமநாதன் வாழும் மரபுகள்)

வேட்டைச் சமூகத்தில் பாதீடும் கூட்டாக உண்ணுதலும் இயல்பாகக் காணக்கூடிய ஒன்றாக காணப்படுகின்றது. வேட்டுவப் பொருளாதாரத்தில் பகிர்ந்தளித்தல் என்பது ஒரு வகையில் பார்த்தால் சேமித்துவைத்தல் என்று பொருளாகும். ஒரு மனிதன் அல்லது குழுவினர் வேட்டையாடி கிடைக்கும் இறைச்சியை அனைவருக்கும் பகிர்ந்து கொடுப்பார்கள். பெற்றுக் கொண்டவர்கள் வேட்டையாடும் போது கிடைக்கும் இறைச்சியை "பாதீடு' செய்வர். ஆதலின், முதலில் கொடுத்தவர்களுக்கு இறைச்சியானது மீண்டும் கிடைக்கிறது. இது சேமித்ததை மீண்டும் பயன்படுத்துவதைப் போன்றது ஆகும். ஆதலின் வேட்டுவச் சமூகங்களில் பகிர்ந்துகொள்ளுதல் (பாதீடு) பிழைப்பாதார மதிப்பைப் (Survival Value) பெற்றதாகும். மேலும், வேட்டுவச் சமூகம் சமத்துவச் சமூகமாக இருப்பதற்கு (Egalitarian) பரஸ்பர பாதீடும் ஒரு முக்கியக் காரணியாக விளங்குகிறது. (பக்தவச்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள்) இத்தகைய பகிர்ந்துண்ணும் மரபு தொன்று தொட்டுத் தொடங்கி இன்று வரை நரிக்குறவர் மக்களிடையே இருப்பது போற்றுதலுக்குரியது.

## வழிபாடு

நரிக்குறவர்கள் சமூகத்தில் பலியிடுதல் பொருட்டு கால்வழிப் பிரிவுகள் முன்னெடுக்கப் படுகின்றன. முதல் கடவுள் "தாதாஜி" என்ற பெயரில் சிவனை வழிபடுகின்றனர். முதல் கடவுள் தவிர்த்து மற்ற அனைத்துக் கடவுளரும் பெண் தெய்வங்களாகவே இருக்கின்றன. தாய்த் தெய்வ வழிபாடு முன்னிறுத்தப்படுவதும் இவ்வினத்தின் தனிச்சிறப்பு. "தராங்கு" அல்லது "சாமி மூட்டை" (கடவுள் உருவங்கள் பொதிந்த மூட்டை) என்பது ஆண்களின் மதிப்பைச் சமூகத்தில் உயர்த்தும் மரபு சார்ந்த ஒரு பொருளாகப் பார்க்கப்படுகிறது. ஆண்களுக்கானச் சமூக மதிப்பு இதன்வழி நிர்ணயிக்கப்படுகின்றது. பலியிடுதல் (எருமைப் பலி - வல்லாட்டுக் கிடா பலி) வழிபாட்டில் முக்கிய இடம் பெறுகிறது.

## நரிக்குறவரின் சமூக விழுமியங்கள்

ஆண் - பெண் சமத்துவம் பேணப்படுவது, ஆண்கள் பெண்ணுக்குப் பரிசப்பணம் கொடுத்தே மணம்முடிக்கும் வழக்கம் போற்றுதலுக்குரியது. வரதட்சணை என்ற பேச்சுக்கு இங்கு இடம் இல்லை. "விதவை' என்ற நிலையே

இச்சமுகத்தில் இல்லை. குறிப்பாக மறுமணம் அனுமதிக்கப்படுகிறது. பாலியல் சார்ந்தக் குற்றங்கள் மிக மிகக் குறைவு. இவை அனைத்தும் நம் சமூகங்கள் கவனத்தில் கொள்ளவேண்டியவை.

நரிக்குறவர் சமூகத்தின் முக்கிய அம்சங்களில் குறிப்பிடத்தக்கது சிசுக்கொலைகள் இல்லாமை. பிரசவத்திற்குப்பின் மனைவியைக் கணவன் குறிப்பிட்டக் காலம் வரையில் பராமரிப்பது வரவேற்கத்தக்கது. தமிழரில் பெண்ணுக்கு மட்டுமே திருமணத்திற்கானத் தாலி என்ற அடையாளம் இருக்கும் நிலையில், ஆண் -பெண் இருவருக்குமான திருமண அடையாளத்தை வழங்கும் ஒரு சமூகமாக நரிக்குறவர் சமூகம் விளங்குகிறது. இங்கு மணமக்கள் திருமணத்திற்குப் பின்னர் தங்கள் பற்களை ஒருவகை மூலிகைப் பொடியினால் கருப்பாக்கிக் கொள்வது மரபாகப் பின்பற்றப்படுகிறது.

மிக முக்கியமாகப் பெரியோரைப் பேணுவது, முதியவர்கள் இச்சமூகத்தில் முக்கியத்துவம் பெறுவது குறிப்பிடத்தக்கது. முதியவர்களின் பேச்சு இளையோரால் மதிக்கப்படுவதும் நம் சமூகம் கற்க வேண்டிய பாடம். இறப்பு நிகழ்வில் இறந்தவர் உடல் ஒரே இரவில் புதைக்கப்படுகிறது. இறப்பிற்குப் பின் இடம் பெயர்வு கட்டாயமாக நடத்தப்படுகிறது. பொதுவாக, ஏழு என்பது பழங்குடிகளிடம் நம்பிக்கைக்குரிய எண்ணாக பார்க்கப்படுகிறது. ஏழு இலைகளில் படையலிட்டு மூதாதையர் வழிபாடு நடத்தப்படுவதும் தனிச்சிறப்பு. (பக்தவச்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள்.)

மொத்தத்தில் சாதி படிநிலைகளற்ற சமூகம், ஆண்-பெண் உறவில் சமத்துவம், தனிமனித சுதந்திரம், வரதட்சணையற்ற சமூகம், விதவை என்ற நிலையின்மை, பெரியோரைப் பேணல், கூட்டுக்குடும்பம், தனிச்சொத்து இல்லாமை, எல்லோருக்கும் எல்லாம், பழமையான மரபுகளை மீறாதிருத்தல் இப்படிச் சொல்லிக் கொண்டே போகும் அளவுக்குப் பழங்குடிகள் தங்கள் பண்பாட்டு மரபுகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவது போற்ற வேண்டிய ஒன்று.

## முடிவுரை

மனித குலம் அடைய விரும்பும் மிக உயர்ந்த சமூக விழுமியங்கள் அனைத்துமே பழங் குடிகளிடம் மிகுதியாகவே காணப்படுகின்றன. நரிக்குறவர் வழக்காறுகளில் குறிப்பாக, இந்தியாவில் வழக்கொழிந்து போயிருக்கும் அச்சமூட்டும் பலியிடுதல் மரபு போன்றவற்றைப் பார்ப்பவர்களுக்கு நரிக்குறவர்கள் காலத்தால் உறைந்துப்போன காட்டுமிராண்டிகள் என்ற தவறான எண்ணம் உருவாவது இயற்கை தான்! ஆனால், அவர்களின் தெளிவான இனக்குழு அமைப்பு - பாசம் - புரிந்துணர்வு - பொருளாதாரத்தை தாண்டிய நிறைவான வாழ்வு - தன்னலமற்ற தன்மை முதலியவற்றைப் பார்க்கும்போது நரிக்குறவர் இனத்தை இன்றைய மனித வாழ்வின் பலநிலைகளில் முன்மாதிரியாகக் கொள்ளலாம். நரிக்குறவர் மற்றும் குருவிக்காரர் சமூகங்களில் கண்ணியமான வாழ்க்கையை உறுதிச்செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்ள அரசு உறுதியளித்திருக்கும் இவ்வேளையில் இத்தகைய பழங்குடிக் குறித்த ஆவணப்பதிவுகள் அவர்களின் வாழ்வில் ஒரு புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சும் என்பதுத் திண்ணம்.

## துணை நூற்பட்டியல்

1. கரசூர் பத்மபாரதி, நரிக்குறவர் இனவரைவியல், தமிழினி பதிப்பகம், சேலவாயல், சென்னை
2. பிலோ இருதயநாத், யார் இந்த நாடோடிகள், வானதி பதிப்பகம், தியாகராய நகர் சென்னை
3. பேரா. பக்தவச்சல பாரதி, பேரா. கலாநிதி, இலங்கை இந்திய மானிடவியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி). லிட், அம்பத்தூர், சென்னை
4. பேரா. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், (2011) அடையாளம் பதிப்பகம் திருச்சி மாவட்டம்.

5. ஆ. தனஞ்செயன், விளிம்பு நிலை மக்கள் வழக்காறுகள் (இன வரைவியல் ஆய்வு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி). லிட், அம்பத்தூர், சென்னை
6. டாக்டர் ஆறு. இராமநாதன், (பதிப்பு) வாழும் மரபுகள், (2001) தன்னனானே பதிப்பகம், பெங்களூர்.
7. பேரா. பக்தவச்சல பாரதி, தமிழகப் பழங் குடிகள், (2013) அடையாளம் பதிப்பகம், திருச்சி
8. டாக்டர் கோ. சீனிவாசவர்மா, நரிக்குறவப் பழங்குடி மக்கள், (1978) அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
9. ந.சி. கந்தையா பிள்ளை, தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், (2015) சந்தியா பதிப்பகம் சென்னை.
10. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, ஐங்குறுநூறு (பதிப்பு), கழக வெளியீடு சிதம்பரம்.